30.08.2024 STC 12/2024 PW1. ராஜ்குமார்

கடந்த 26.07.2024ம் தேதி மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் பிரிவு 145ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.

1. குற்றம் சுமத்தப்பட்ட நபர் Online தொழில் செய்து வருவது சம்பந்தமாக நான் எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் Merchant Navy முடித்துள்ளேன். என்னுடைய வீட்டுக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டுக்கும் இடையே சுமார் 15கி.மீ தொலைவு இருக்கும் என்றால் இல்லை 10கி.மீ தான் இருக்கும். கம்மியாக தான் இருக்கும்.

2. மேற்படி Online shopக்கு பங்குதாரர் தேவை என்று ஏதேனும் விளம்பரம் செய்திருந்தாரா என்றால், ஆம். Whatsappல் பண்ணியிருந்தார். நண்பர் மூலமாக சொல்லியிருந்தார். மேற்படி விவரங்களை நான் எனது வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால், தேவைப்படாததால் சொல்லவில்லை. என்னுடைய புகாரில் வழக்கு காசோலை தொகையான 15இலட்சத்தை எந்த இடத்தில் வைத்து தந்தேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. Whatsapp விளம்பரம் குறித்து அதற்கான ஆவணங்களை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். காசோலை இருந்ததால் நான் அதை தாக்கல் செய்யவில்லை. 15இலட்ச ரூபாய் பெரிய தொகை என்றால் சரிதான். மேற்படி தொகையை நான் எவ்வாறு ஏற்பாடு செய்தேன் என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. நான் மேற்படி தொகையை 3 தவணையாக கொடுத்தேன். தமிழ்நாடு மெர்கன்டையில் வங்கி, குளச்சல் கிளையிலிருந்து 5இலட்சம் ரூபாய் முதல் தவணையாக கொடுத்தேன். 2வது தவணை குற்றம் சுமத்தப்பட்ட நபரின் Manager– அபிஷ் என்பவரிடம் கொடுத்தேன். அவர் வீட்டில் வந்து வாங்கி சென்றார். 3வது தவணை TMB, குளச்சல் வங்கி கிளையின் மூலம் கொடுத்தேன். மேற்படி சங்கதியை எனது வழக்கில் நான் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை.

5. எனது வங்கி பரிவர்த்தனை புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், தாக்கல் செய்ய இயலும். மேற்படி காலக்கட்டத்தில் எனது வங்கி பரிவர்த்தனையில் மேற்படி வழக்கு காசோலை தொகை துலங்குமா என்றால் துலங்கும். நான் வருமானவரி கட்டுவது இல்லை. நான் NRI.

6. நான் பஞ்சாப் நேஷனல் வங்கியில் 9இலட்சத்து 40ஆயிரம் ரூபாய் லோன் எடுத்துக் கொடுத்தேன். மேற்படி சங்கதியை நான் வழக்கில் சொன்னேனா என்றால், இல்லை. அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், தாக்கல் செய்ய இயலும்.

7. நான் சொன்ன தேதியில் வழக்கு காசோலை தொகை கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்று சொன்னால், சரியல்ல. வசதி இருந்தது. நான் நகையை அடகு வைத்து முதல் தவணையைக் கொடுத்தேன். மேற்படி சங்கதியை எனது வழக்கில் சொல்லவில்லை என்று சொன்னால், சரிதான். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், தாக்கல் செய்யலாம்.

8. நான் என் பணி சம்மந்தமாக நிலையை புகாரில் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் தெரிவிக்கவில்லை. மேற்படி வழக்கு காசோலையானது காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி வழக்கானது காலாவதி தோஷத்தால் காசோலையைப் பொறுத்து பாதிக்கப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. நான் சரியான காலக்கெடுவுக்குள் காசோலையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைநிக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

9. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எந்த முகவரியில் Online Shopping நடத்தி வந்தார் என்ற விவரத்தை எனது வழக்கில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எங்களுக்கு இடையேயான பரிவர்த்தனையானது சட்டப்படி செயல்படுத்ததக்க கடன் பரிவர்த்தனை இல்லை என்று சொன்னால், சரியல்ல.

10. Ex.P1 ஆனது பதிவு செய்யப்படாத ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் எந்த தேதியில் தயார்செய்யப்பட்டது என்ற குறிப்புகள் அதில் இல்லை என்று சொன்னால் சரிதான். என்னை ஏமாற்றி விட்டார். மேற்படி ஆவணமானது வழக்குக்காக பின் ஆலோசனையிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், இல்லை.

11. என் அப்பா பெயர் மிக்கேல் ராஜ். நான் தாக்கல் செய்த வங்கி திருப்புதல் குறிப்பாணையில் சகாய ராஜி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது என் மனைவி பெயர். நான் ஊரில் வேறு நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

12. 2021ம் வருடம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் 5இலட்ச ரூபாய் கடனாக வாங்கியிருந்தார் என்றாலும், அதற்கு செக்யூரிட்டியாக 3காசோலையையும் நிரப்பப்படாத 100ரூபாய் பத்திரமும் நான் பெற்றுக் கொண்டேன் என்றாலும் அந்த தொகையை குற்றம் சுமத்தப்பட்ட நபர் வட்டியுடன் சேர்த்து 13இலட்சத்துக்கும் மேலாக கொடுத்து முடித்துவிட்டார் என்றால், சரியல்ல.

13. குற்றம் சுமத்தப்பட்ட நபர் மேற்படி ஆவணங்களை என்னிடம் திரும்பக் கேட்டப்போது நான் கூடுதல் வட்டிக் கேட்டு வட்டி பாக்கி இருப்பதாக நான் கூறி மேற்படி ஆவணங்களை நான் தரவில்லை என்றாலும் அதனை பயன்படுத்தி இந்த வழக்கை

உண்மைக்கு மாறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. வழக்கில் நான் சொன்னது போல் சொன்ன தேவைக்கு நான் எந்த பணமும் தரவில்லை என்றால் சரியல்ல, நான் தந்தேன்.

14. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால், இல்லை.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.